வரையறுக்கப்பட்ட களுவோவிற்றியான தேயிலை தொழிற்சாலைக் கம்பனியின் 2016 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றுக்கள் மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக்கூற்றுக்கள், இலாபநட்டக்கூற்று மற்றும் முற்றுமடங்கிய ஏனைய வருமானக்கூற்றுக்கள், உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றுக்கள், காசுப்பாய்ச்சல் கூற்றுக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களும் ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய மீளாய்வாண்டிற்கான கம்பனியின் செயலாற்றல் மீதான எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கை வழங்கப்படுகின்றது.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான பணிப்பாளர் சபையின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் வங்கியின் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 கம்பனியின் ஸ்தாபிப்பும் உரிமையாண்மையும்

வரையறுக்கப்பட்ட களுபோபிற்றியான தேயிலை தொழிற்சாலைக் கம்பனியின் 1982 இன் 17 ஆம் இலக்க முன்னைய கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்ட பொறுப்புக்கம்பனியாக ஒருங்கிணைக்கப்பட்டதுடன் பின்னர் இது 2007 இன் 07 ஆம் இலக்க புதிய கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் கீழ் மீளப்பதிவு செய்யப்பட்டது. இது முழுமையாக அரச உடமையாக்கப்பட்ட கம்பனியாக இருப்பதுடன் கம்பனியின் தனியான பங்குதாரர் திறைசேரியின் செயலாளராவர்.

## 1.5 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வரையறுக்கப்பட்ட களுவோவிற்றியான தேயிலை தொழிற்சாலைக் கம்பனியின் 2016 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16

நடைமுறையல்லாச் சொத்துக்களின் ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையால் ரூபா 222,062,063 கிரயமான சொத்துக்கள் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்தன. எனினும், அவை இன்னும் பயன்பாட்டிலிருக்கின்றன. அதற்கிணங்க, இலங்கை கணக்கீட்டு நியமம் 08 இன் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வழுக்களை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 19

(i) உள்ளபடியான மிகைகள் அல்லது நட்டங்கள் ஊழியர் நலன்கள் பொறுப்பின் மீள்- அளவீட்டில் இனங்காணப்பட்டு ஏனைய விரிவான வருமானத்தின் கீழ் காட்டப்படவேண்டியிருந்த போதிலும் இது அதற்கிணங்க மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) அறிக்கையிடல் காலப்பகுதியின் இறுதியிலுள்ளவாறு உள்ளபடியான எடுகோளாக பயன்படுத்த வேண்டிய கழிவு வீதம், சொத்துக்கள் மீதான வருமான விகிதம் மற்றும் அதிகரிக்கின்ற சம்பளத்தின் விகிதங்கள் போன்ற ஊழியர் நன்மைகள் மற்றும் விடயங்கள் தொடர்பில் உள்ளபடியான மிகைகள் மற்றும் நட்டங்களை அங்கீகரிப்பதற்கான கணக்கீட்டுக் கொள்கை முறையாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டில் திறைசேரி மானியங்களாக நிதிக்கூற்றுக்களில் பதிவுசெய்யப்பட்ட ரூபா 23,229,000 தொகை மீளாய்வாண்டின் போது பதிவழிக்கப்பட்டிருந்ததுடன் விரிவான வருமானக்கூற்றில் ஏனைய வருமானமாக காட்டப்பட்டிருந்தது. அதனால், ஆண்டிற்கான ரூபா 13,413,472 தேறிய நட்டம் ரூபா 9,815,528 தேறிய இலாபத்திற்கு மாற்றப்பட்டிருந்தது.

(ஆ) 2012/2013 ஆம் ஆண்டில் குத்தகை அடிபப்டையில் பெறப்பட்ட கினிதும கில்ஸ் தேயிலை தொழிற்சாலையின் கட்டிடங்களை பூச்சிடுவதற்கும் திருத்துவதற்குமான ரூபா 6,194,940 மொத்தத் தொகை கட்டிடங்களின் கீழ் மூலதனமாக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 1,238,988 தொகை பெறுமானத்தேய்வாக மூலதனத்திற்கு எதிராக பதிவழிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டில் கணக்குகளிலிருந்து ரூபா 1,000,000க்கு விற்கப்பட்ட தெறன்கல தேயிலை தொழிற்சாலையின் தேயிலை உலர்த்தியின கிரயத்தை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கம்பனியால் மீளாய்வாண்டிற்கான பிற்போடப்பட்ட வரியானது நிதிக்கூற்றுக்களில் சீராக்கஞ்செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

-----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான பேரேட்டுக் கணக்குகளிற்கும் சமரப்பிக்கப்பட்ட நேரொத்த பட்டியல்களிற்கும் இடைணில் பின்வரும் வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டன.

| விபரம் | பேரேட்டுக் கணக்கின் பிரகாரம் மீதி | பட்டியலின் பிரகாரம் மீதி | வேறுபாடுகள் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| இடர் கடன்கள் | 10,477,937 | 10,641,513 | 163,576 |
| ஏனைய கடன்கொடுத்தோர் மீதிகள்-தெறன்ஹல | 1,565,607 | 1,855,185 | 289,578 |
| களுபோபிற்றியான | 2,923,092 | 2,939,644 | 16,552 |

**2.2.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

பின்வரும் விடயங்களுக்கு எதிராக காட்டப்பட்டுள்ள சான்றுகள் கண்காய்விற்காக கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

| விடயம் | பெறுமதி | கிடைக்கப்பெறாத சான்று |
| --- | --- | --- |
| | ரூபா. | |
| கினிதுமா தேயிலை தொழிற்சாலையின் பூச்சிடல் நடவடிக்கைகள் | 6,194,940 | கொள்வனவுக் கோவை |
| ஊரக் கொள்வனவுகள் | 21,911,343 | |
| திறைசேரி மானியங்கள் | 23,229,000 | திறைசேரி மானியம் வழங்கப்படாமைக்கான நோக்கம், வருடம் மற்றும் அதனை செலவிடுதல் தொடர்பான விபரம் |
| கடன்பட்டோர் மீதிகள் | 266,835 | விபரமான பட்டியலகள் |
| முற்கொடுப்பனவுகள் | 313,626 | |

**2.2.5 தொங்கல் கணக்குகள்**

ரூபா 56,244 மற்றும் ரூபா 474,296 தொகையான தொங்கல் கணக்குகளின் மீதிகள் 05 வருடங்களுக்கு மேல் தீர்க்கப்படாமல் முறையே கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோரின் கீழ் முன்கொண்டுவரப்பட்டிருந்தது.

**2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தெறன்கல தேயிலை தொழிற்சாலையின் ரூபா 5,551,518 பெறவேண்டிய மீதியில் ரூபா 1,317,107 தொகை அல்லது 24 சதவீதம் மற்றும் ரூபா 4,554,872 பெறவேண்டிய மீதியில் ரூபா 1,454,517 தொகை அல்லது 32 சதவீதம் மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு 5 வருடங்களை விஞ்சியிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு களுபோபிற்றியான தேயிலை தொழிற்சாலையின் ரூபா 31,197,181 பெறவேண்டிய கடன் மீதியில் ரூபா 1,687,078 தொகை மற்றும் அத்திகதியிலுள்ளவாறான தெறன்ஹல தேயிலை தொழிற்சாலையின் ரூபா 11,121,058 செலுத்தவேண்டிய மீதியில் ரூபா 2,841,646 தொகை அல்லது 26 சதவீதம் 5 வருடங்களை விஞ்சியிருந்தது.

(இ) கம்பனியால் தேயிலை இலைகளுக்காக தேயிலை வழங்குனர்களுக்காக செலுத்தவேண்டிய தொகைகளிலிருந்து உரங்களிற்கான தேயிலை உரிமையாளர்களுக்கு கொடுக்கப்பட்ட தொகையின் அறவீட்டிற்குப் பின்னர் உர வழங்குனர்களுக்கு கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்காக முறைமையொன்று இருந்தபோதிலும் ரூபா 1,821,000 பெறுமதியான 04 உரக் கடன்கொடுத்தோர்கள் மீதான தகவல்கள் கம்பனியில் இருக்கவில்லை. இதற்கு மேலதிகமாக, 03 வருடங்களுக்கு மேலாகவுள்ள 04 உரக் கடன்கொடுத்தோர் மீதிகள் அவற்றைத் தீர்க்கப்படாமல் முன்கொண்டுவரப்பட்டிருந்தது.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றிற்கான தொடர்பு | இணங்காமை |
| --- | --- |
| 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டம் | |
| (அ) பிரிவு 133 | வருடாந்த பொதுக்கூட்டமானது ஐந்தொகைத் திகதியிலிருந்து 06 மாதங்களை விட காலதாமதமில்லாமலும் முன்னைய வருடாந்த பொதுக்கூட்டம் நடைபெற்று 15 மாதங்களை விட காலதாமதமில்லாமலும் நடைபெறவேண்டியிருந்த போதிலும் 2011/2012 ஆம் ஆண்டிற்கு பின்னர் கடந்த வருடாந்த பொதுக்கூட்டம் நடைபெற்றிருக்கவில்லை. |
| (ஆ) பிரிவு 150 | நிதிக்கூற்றுக்களானது ஐந்தொகை திகதி முடிவடைந்த பின்னர் ஆறு மாதங்களினுள் அல்லது பதிவாளரால் தீர்மானிக்கப்பட்ட அத்தகைய நீடிப்புக் காலத்தினுள் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அதன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) பிரிவு 166 | பணிப்பாளர் சபையானது ஐந்தொகை திகதிக்கு பின்னர் ஆறு மாதங்களினுள் முடிவடைந்த காலப்பகுதிக்கான கம்பனியின் வருடாந்த ஆண்டறிக்கையை தயாரிக்கப்பட வேண்டியிருந்தபோதிலும் அதன்படி நடைபெற்றிருக்கவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான கம்பனியின் நிதிசார்விளைவுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் ரூபா 13,137,312 வரிக்கு முன்னரான தேறியலாபத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 9,815,528 வரிக்கு முன்னரான தேறியலாபத்தை விளைவித்திருந்தமையால் மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 3,321,784 அல்லது 25 சதவீதம் ஆன வீழ்ச்சியினை சுட்டிக்காட்டுகின்றது. முன்னைய

ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் ரூபா 5,543,517 ஆல் நிதிசார் செலவினம் அதிகரித்தமை மேற்குறிப்பிடப்பட்ட பின்னடைவைக்கு பிரதான காரணமாக பங்களித்திருந்தது.

மீளாய்வாண்டிற்கான மற்றும் முன்னைய 04 ஆண்டுகளிற்கான நிதிசார் விளைவுகளை பகுப்பாய்வானது தொடர்ச்சியான தேறிய இலாபத்தை வெளிப்படுத்திருந்தது. இருந்த போதிலும், இலாபத்தில் பின்னடைவானது வருடாந்தம் அவதானிக்கப்பட்டது. கம்பனயின் ஊழியர் மிகையூதியம், நடைமுறையல்லாச் சொத்துக்கள் மீதான பெறுமானத்தேய்வு மற்றும் அரச வரியை கருத்திலெடுக்கும் போது கம்பனியின் பங்களிப்பானது சாதகமான பெறுமதயிலருந்தது. 2011/2012 ஆம் ஆண்டின் பங்களிப்புடன் ஒப்பிடும்போது 2012/2013 ஆம் ஆண்டின் பங்களிப்பு குறைவடைந்திருந்த போதிலும் பின்னர் இது வழமையாக அதிகரித்திருந்தது. ஆகையால், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டிற்கான பங்களிப்பில் 11 சதவீத முன்னேற்றம் வெளிக்காட்டுகின்றது.

### 3.2 இலாபத்தன்மை விகிதப் பகுப்பாய்வு

---------------------------------------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான மொத்த இலாப விகிதம் முறையே 1.079 மற்றும் 1.74 சதவீதமாகவிருந்தது. முன்னைய ஆண்டிற்கான விற்பனைக்கிரயமானது விற்பனை வருமானத்தில் 94 சதவீதமாகவிருந்த போதிலும் மீளாய்வாண்டில் இது 99 சதவீதமாகவிருந்ததுடன் விகிதப் பின்னடைவிற்கான பிரதான காரணமாக இதுவிருந்தது. மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான தேறிய இலாப விகிதம் முறையே 1.26 மற்றும் 2.3 சதவீதமாகவிருந்ததுடன் மீளாய்வாண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் தேறிய நிதி வருமானம் 71 சதவீதத்தால் குறைவடைந்தமை இதற்கான பிரதான காரணமாகவிருந்தது.

### 3.3 கம்பனியால் அல்லது கம்பனிக்கு எதிராக தொடுக்கப்பட்ட வழக்குகள்

------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2007 இல் இரண்டு ஊழியர்களால் அவர்களை சேவையிலிருந்து இடைநிறுத்தியமை தொடர்பில் கம்பனிக்கு எதிராக கொற்றப்பல ஊழியர் நியாயசபையில் வழக்கொன்று தொடரப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் இது முடிவுறுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கம்பனியின் 2010/2011 ஆம் ஆண்டிற்கான வருமானவரிக் கொடுப்பனவிற்கான அடிப்படை சரியாகவிருந்ததென எனக்குறிப்பிட்டு வருமானவரி மேன்முறையீட்டு ஆணைக்குழுவால் கொடுக்கப்பட்ட தீர்ப்பு தொடர்பில் கம்பனிக்கு எதிராக இறைவரித்திணைக்களத்தால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்கொன்று தொடரப்பட்டிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

#### (a) தேயிலை உற்பத்தி

கம்பனியால் கணக்காய்விற்கு வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், முன்னைய மூன்று ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட தேயிலை உற்பத்தியின் சதவீதம் பின்வருமாறுள்ளது.

| ஆண்டு | தேயிலை தொழிற்சாலை | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | களுவோபிற்றியான | | | தெறன்கல | | | ஹினிதுமா | | |
| | பச்சை இலை | உற்பத்தி செய்யப்படட தேயிலை | உற்பத்தி செய்யப்பட்ட தேயிலையின் சதவீதம் | பச்சை இலை | உற்பத்தி செய்யப்பட்ட தேயிலை | உற்பத்தி செய்யப்பட்ட தேயிலையின் சதவீதம் | பச்சை இலை | உற்பத்தி செய்யப்பட்ட தேயிலை | உற்பத்தி செய்யப்பட்ட தேயிலையின் சதவீதம் |
| | கிலோ கிராம் | கிலோ கிராம் | | கிலோ கிராம் | கிலோ கிராம் | | கிலோ கிராம் | கிலோ கிராம் | |
| **2015/16** | 4,774,872 | 994,540 | 20.83 | 2,249,785 | 460,860 | 20.48 | 1,095,511 | 219,765 | 20.06 |
| **2014/15** | 4,446,200 | 943,706 | 21.23 | 1,539,562 | 315,854 | 20.52 | 834,380 | 171,751 | 20.58 |
| **2013/14** | 4,638,578 | 995,844 | 21.47 | 1,386,298 | 281,666 | 20.32 | 731,251 | 146,031 | 19.97 |

தேயிலைச் சபையின் நிபந்தனையின் பிரகாரம், 100 கிலோகிராம் பயன்படுத்திய பச்சை இலையில் 21.5 கிலோகிராம் தேயிலை உற்பத்தி இருக்க வேண்டும். எனினும், தெறன்கல மற்றும் கினிதுமவின் இரண்டு தொழிற்சாலைகளின் தேயிலை உற்பத்தி மேற்குறிப்பிட்டதன் பிரகாரம், 03 முன்னைய ஆண்டுகளின் போது உத்தம மட்டத்தில் இல்லாதிருந்ததுடன் 04 முன்னைய ஆண்டுகளின் போது ரூபா 35,741,599 திரண்ட நட்டம் ஏற்படுத்தப்பட்டது.

#### (ஆ) உற்பத்திக் கிரயம் மற்றும் தேறிய விற்பனை சராசரி விலை

கம்பனியால் கணக்காய்விற்கு வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், முன்னைய மூன்று ஆண்டுகளில் 04 தொழிற்சாலைகளின் உற்பத்திக் கிரயம் மற்றும் தேறிய விற்பனை சராசரி விலை என்பன பின்வருமாறுள்ளது.

| தொழிற்சாலையின் பெயர் | 1 கிலோகிராம் தேயிலை உற்பத்திக்கான கிரயம் | | | 1 கிலோகிராம் தேயிலைக்கான தேறிய விற்பனை சராசரி விலை | | | 1 1 கிலோகிராம் தேயிலைக்கான பங்களிப்பு | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | **2015/16** | **2014/15** | **2013/14** | **2015/16** | **2014/15** | **2013/14** | **2015/16** | **2014/15** | **.2013/14** |
| | Rs. | Rs. | Rs. | Rs. | Rs. | Rs. | Rs. | Rs. | Rs |
| களுபோபிற்றியான | 407.63 | 480.32 | 518.83 | 459.72 | 531.32 | 572.46 | 52.09 | 51.00 | 53.63 |
| தெறன்ஹல | 430.72 | 503.67 | 525.53 | 413.50 | 470.60 | 516.14 | (17.22) | (33.07) | (9.39) |
| ஹினிதும | 459.03 | 524.12 | 559.96 | 402.43 | 460.78 | 494.11 | (56.60) | (63.34) | (65.85) |
| மெனிக்டிவெல | 522.58 | - | - | 375.09 | - | - | (147.49) | - | - |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) முன்னைய 03 ஆண்டுகளின் போது களுபோபிற்றியான தேயிலை தொழிற்சாலையைத் தவிர ஏனைய தொழிற்சாலைகளில் 1 கிலோகிராம் தேயிலை உற்பத்திக்கான கிரயமானது தேறிய விற்பனை சராசரி விலையை விட அதிகமாகவிருந்தது. அதனால், அத்தகைய தொழிற்சாலைகள் தொடர்ச்சியாக நட்டத்தை ஏற்படுத்தியிருந்தது.

(ii) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது, அனைத்து தொழிற்சாலைகளின் தேறிய விற்பனை சராசரி விலையானது பின்னடைவைலிருந்தது.

**(இ) இயலுமைப் பயன்பாடு / இலக்கிடப்பட்ட தேயிலை உற்பத்தி**

மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம்இ தொழிற்சாலை ஒவ்வொன்றிற்குமான தேயிலை உற்பத்திக்கான இலக்குகள் உள்ளடக்கப்பட்டிருக்காததுடன் கம்பனியின் பாதீட்டின் பிரகாரம், இலக்கிடப்பட்ட மற்றும் உள்ளபடியான தேயிலை உற்பத்தி தொழிற்சாலையில் பயன்படுத்திய பொறிகள் பின்வருமாறுள்ளது.

| தொழிற்சாலை | பாதீட்டின் பிரகாரம் இலக்கிடப்பட்ட தேயிலை உற்பத்தி | உள்ளபடியான தேயிலை உற்பத்தி | முரண்பாட்டின் சதவீதம் | உற்பத்தி இயலுமை | குறைப்பயன்பாட்டின் சதவீதம் |
|---|---|---|---|---|---|
| ----------- | ------------ | ------------- | ------------- | ------------- | ---------------- |
| | கிலோ கிராம் | கிலோ கிராம் | | கிலோ கிராம் | |
| களுபோபிற்றியான | 1,092,588 | 994,540 | 9 | 1,350,000 | 26 |
| தெறன்ஹல | 542,084 | 460,860 | 15 | 485,000 | 5 |
| ஹினிதும | 263,263 | 219,765 | 16 | 485,000 | 55 |
| மெனிக்டிவெல | 141,627 | 117,017 | 17 | 450,000 | 74 |

களுபோபிற்றியான மற்றும் ஹினிதும தொழிற்சாலைகளானது முழு இயலுமையை பயன்படுத்துவதற்காக போதிய பச்சை இலைகளை பெறாமையால் களுபோபிற்றியான மற்றும் ஹினிதும தொழிற்சாலைகள் இயலுமையை விட குறைவாக தொழிற்படுகின்றன என அவதானிக்கப்பட்டது.

**(ஈ) தேயிலை நாற்றுமேடை**

தெறன்கல தேயிலை தொழிற்சாலைக்கு இணைக்கப்பட்டுள்ள தேயிலை நாற்றுமேடை தரமான தேயிலை இலைகளை வழங்கும் நோக்குடன் 2015 இல் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 1,201,075 தொகை செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இந்த வர்த்தக சிறுகிளை நாற்றுமேடையின் இயலுமை 100,000 தாவரங்களாகவிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதியில் நாற்று மேடையிலுள்ள தேயிலைத்தாவரங்களின் மொத்த எண்ணிக்கை 54,517 ஆகவிருந்தது. அதனால் இது மொத்த இயலுமையில் 54.52 சதவீதத்தை மாத்திரம் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

(ii) நாற்றுமேடையிலுள்ள தாவரங்களின் எண்ணிக்கையில் 13,208 தாவரங்கள் அழுகியிருந்ததுடன் இது மொத்த எண்ணிக்கையான தாவரங்களில் 14.99 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தியது.

## 4.2 கொள்வனவு செயன்முறைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) குத்தகை அடிப்படையில் பெறப்பட்ட மெனிக்டிவெல தேயிலை தொழிற்சாலையின் அபிவிருத்திக்காக ரூபா 55,112,792 தொகை செலவழிக்கப்பட்டிருந்த போதிலும், இதனை உற்பத்தி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்துவதற்காக அரச கொள்வனவு வழிகாட்டிகளிலுள்ள ஏற்பாடுகள் அதற்கேற்ப பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வரையறுக்கப்பட்ட களுபோபிற்றியான தேயிலை தொழிற்சாலைக்குரிய தொழிற்சாலைகளினூடாக பச்சை இலை வழங்குனர்களுக்கு கொடுப்பதற்காக உரக்கொள்வனவிற்காக அரச கொள்வனவு வழிகாட்டிகளைப் பின்பற்றாமல் ரூபா 21,911,343 தொகை செலவிடப்பட்டிருந்தது.

## 4.3 முகாமைத்துவ நடவடிக்கைகள்

-----------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பனியின் தேயிலை சக்தி நிதியத்திற்குச் சொந்தமான நிர்மாண வேலைகளின் கீழ் உள்ள கின்தும தேயிலை தொழிற்சாலையை 30 வருடங்கள் குத்தகை அடிப்படையில் பெறுவதற்காக 2015 ஏப்ரல் 09 இல் குத்தகை வாடகையாக ரூபா 50,000,000 தொகை செலுத்தப்பட்டிருந்தபோதிலும் இரு தரப்பினரும் கணக்காய்வு அறிக்கைத்திகதி வரை முறையான உடன்படிக்கையொன்றில் ஈடுபட்டிருக்கவில்லை.

(ஆ) மெனிக்டிவெல தேயிலை தொழிற்சாலை அமைந்துள்ள காணி தொடர்பில் அரச காணி பிரமாணம் 21 (2) தொடர்பில் 2014 யூலை 04 ஆந் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் வர்த்தகமான அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட காணிகள் பணிப்பாளர் நாயகத்தின் அறிவித்தலின் பிரகாரம், குத்தகைத் திகதியிலிருந்து 05 வருடங்கள் ஆகக்குறைந்த காலத்தை கடப்பதற்கு முன்னர் உபகுத்தகை மேற்கொள்ளப்பட முடியாது என குறிப்பிடப்பட்டிருந்தது. இருந்தபோதிலும், மேற்குறிப்பிட்டதன் பிரகாரம், 05 தேயிலை சக்தி நிதியத்திற்கு குத்தகை அடிப்படையில் காணியைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கினிதும மற்றும் மெனிக்டிவெல தொழிற்சாலைகளிற்காக இரண்டு நிற பிரிப்பான் கொள்வனவிற்காக 2015 ஆம் ஆண்டிலிருந்து 2017 ஆம் ஆண்டு வரை 3 சந்தர்ப்பங்களில் பத்திரிகை விளம்பரங்களைப் பிரசுரிப்பதற்காக விலைகூறுகள் கோரப்பட்டிருந்த போதிலும் அத்தகைய விலைக்கூறுகள் இரத்துச்செய்யப்பட்டிருந்ததுடன் இது நான்காவது தடவைக்காகவும் விலைக்கூறுகளை கோருவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. கொள்வனவுச் செயன்முறைகளில் ஏற்பட்ட அசட்டையீனம் மற்றும் வினைத்திறமையீன்மைகள் விலைக்கூறுகளை இரத்துச் செய்வதற்கான பிரதான காரணங்களாகவிருந்தன.

(ஈ) மீளாய்வாண்டின் போது ரூபா 1,897,386 செலவினம் ஏற்படுத்தப்பட்டிருந்ததுடன் மெனிக்டிவெல தொழிற்சாலையில் தேயிலை உற்பத்தி அளவினை உயர்மட்டத்திற்கு உயர்த்துவதற்கும் அதன் அடிப்படையில் தேயிலைக்காக உயர் விலையைப் பெறுவதற்குமாக செயற்பாட்டு குத்தகை முறைமையின் கீழ் நிற தனிப்பான் பெறப்பட்டிருந்தது. எனினும், தேயிலைக்கு எதிர்பார்க்கப்பட்டவாறு உயர் விலையை பெறமுடிந்திருக்கவில்லை.

(உ) களுபோபிற்றியான தேயிலை தொழிற்சாலையின் தேயிலை உலர்த்தியின் திருத்தங்களிற்காக 2012 ஆம் ஆண்டில் ரூபா 7,380,537 கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் சேவை வழங்குனர்களால் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் மீது தொழில்நுட்ப அறிக்கை பெறப்பட்டிருக்கவில்லை. அத்தகைய திருத்தங்கள் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் பூர்த்திசெய்யப்பட்டிருக்காததுடன் செலுததப்பட்ட அத்தொகை கணக்குகளிற்கு முற்பணங்களாக கணக்குகளிற்கு கொண்டுரப்பட்டிருந்தது.

(ஊ) தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பின் இடர்சரிவு கற்கைகள் மற்றும் சேவைகள் பிரிவின் அறிக்கைகளின் பிரகாரம் பள்ளத்தாக்குடனான கூர்மையான சாய்வு காணி மீது அமைந்துள்ள மெனிக்டிவெல தொழிற்சாலையில் மேற் பகுதி கடுமையான அரிப்பினால் நிலையற்றதாகவிருந்ததுடன் தொழிற்சாலைக் கட்டிடங்களின் சுவர்களின் மீது வெடிப்புக்கள் அவதானிக்கப்பட்டன. இது தொடர்பில் அதற்கான நிதியத்தை புலனாய்வு செய்வதற்கு முன்னர் கம்பனியால் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.4 ஆளணி நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அலுவலரொருவர் மெனிக்டிவெல தேயிலை தொழிற்சாலையின் உதவி தொழிற்சாலை அலுவலகரொருவர் கல்விசார் மற்றும் தொழில்சார் தகைமையில்லாமல் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத்திட்டத்திற்கு முரணாக ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர். அத்தோடு, அதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மெனிக்டிவெல தொழிற்சாலை முகாமையாளர் பதவிக்காக அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு திட்டத்திற்கிணங்க முறையான மற்றும் வெளிப்படையான முறையில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதி பெறப்பட்டிருந்த போதிலும், தொழிற்சாலை முகாமையாளர் பதவிக்காக உரிய கல்விசார் தகுதிகளைப் பூர்த்திசெய்யாத அலுவலரொருவர் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டிருந்தார்

(இ) கனிஸ்ட உதவி தொழிற்சாலை அலுவலர்களின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி அனைத்துத் தொழிற்சாலைகளிற்குமாக 10 ஆகவிருந்த போதிலும் உள்ளபடியான பதவியணி 19 ஆகவிருந்ததுடன் மிகையான பதவியணி 9 ஆகவிருந்தது.

# 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 இன் பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களிற்குள் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். எனினும், மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 பெப்ரவரி 08 இல் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

## 5.2 தீர்க்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

பின்வரும் பெறவேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு 2013 பெப்ரவரி 37 இல் நடைபெற்ற பொது முயற்சிக்குழுவில் திணிக்கப்பட்டிருந்தது.

(அ) 2013 இல் வரையறுக்கப்பட்ட பீசீசீ லங்கா கம்பனிக்கு 22 சதவீத அடிப்படையில் 12 தவணைக்கட்டணங்களாக அறவிடும் அடிப்படையில் ரூபா 10,000,000 தொகையான கடன் வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு ஆகக்குறைந்த கட்டணத்தையும் அறவிடாமையால் மொத்த அறவிடப்படவேண்டிய தொகை ரூபா 44,702,867 தொகையாகவிருந்தது.

(ஆ) தரகர் கம்பனியிடமிருந்து 2009 ஆம் ஆண்டில் பெறவேண்டிய ரூபா 789,461 தொகை மீளாய்வாண்டின் இறுதி வரை அறவிடப்படாதிருந்தது.

## 5.3 உள்ளகக் கணக்காய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அமைச்சின் உள்ளக்கணக்காய்வாளரின் 2015 யூன் 23 ஆம் திகதிய எம்பிஜ/ஜஏ/01/எஸ்ஜ/02-2015 ஆம் இலக்க அவதானிப்பு அறிக்கையின் பிரகாரம், பொது நிதி 353 (5) ஆம் இலக்க சுற்றறிக்கையில் குறிப்பிட்ட மோட்டார் வாகனங்களை வாடகைக்மர்த்தியமைக்காக ஆகக்கூடிய மாதாந்த வாடகைக் கொடுப்பனவை விஞ்சி 2011 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டு வரை ரூபா 4,290,000 கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமை காட்டப்பட்டிருந்தது. இருந்த போதிலும், இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2016 ஏப்ரல் 04 இலிருந்து உள்ளகக் கணக்கய்வாளர் நியமிக்கப்பட்டிருந்த போதிலும் ஒரு உத்தியோகத்தர்களும் இணைக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் காலத்திற்குக் காலம் நிறுவனத்தின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுகளின் பரப்புக்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) கணக்கீடு | கணக்குகளை சமர்ப்பிபதிலுள்ள காலதாமதம் |
| (ஆ) கொள்வனவு நடவடிக்கைகள் | அரச கொள்வனவு வழிகாட்டிகளுடன் இணங்காமைகள் |
| (இ) பெறவேண்டிய வெலுத்த வேண்டிய கணக்குகள் | நீண்டகாலமாக தீர்கக்கப்பாத மீதிகனை அறவிடுவதிலுள்ள காலதாமதம் |
| (ஈ) நிதிக்கட்டுப்பாடு | வங்கி மேலதிகப்பற்று மீதான வட்டியின் அதிக தொகையின் கொடுப்பனவு |
| (உ) தொழிற்சாலை செயற்பாடுகள் | தொழிற்சாலைகளால் நிலைநிறுத்தப்பட்ட நட்டம் |
| (ஊ) நிலையான சொத்துக்கள் முகாமைத்துவம் | நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்படாமை மற்றும் குத்தகை அடிப்படையில் பெற்ப்பட்ட சொத்திற்கான குத்தகை உடன்படிக்கைகள் இல்லாமை. |